திரு. கே. எ. வகாப் : வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற சில டிராக்டர்கள் அளிக்கப்பட்டாலும் இங்கு உற்பத்தியாகின்ற ஃபெர்கூசன் டிராக்டர்கள் விவசாயிகளுக்குச் சாதகமாக இருக்கின்றன. வெளிநாட்டு டிராக்டர்கள் ஜெர்மன் டிராக்டர்கள் சரியாக வேலை செய்யவில்லை என்றும் கூறப்படுகிறது. இந்தக் காரணங்களை எடுத்துக்காட்டி உழவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் வெளிநாட்டிலிருந்து நேரடியாக டிராக்டர்களை இறக்குமதி வரி இல்லாமல் இறக்குமதி செய்து கொள்வதற்கு வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வது கூட மத்திய அரசாங்கத்தின் கொள்கை காரணமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது, வெகுவாக. சென்னையிலேயே உற்பத்தியாகும் ஃபெர்கூசன் டிராக்டர்களை சிம்சன் கம்பெனி தயார் செய்கிறார்கள். கோவையில் ஒரு கண்காட்சி வைத்திருந்தார்கள். அதைக் கொண்டு போய்க் காட்டினார்கள். மற்ற இடங்களை எல்லாம் பார்த்துவிட்டு ஃபெர்குசன் டிராக்டர் வைக்கிருக்கும் இடத்தில் கால் மிதிக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டேன். 'நீங்கள் ஃபெர்குசனை வேறு மாநிலங்களுக்கு அனுப்புகிறீர்கள் ; எங்களுக்குக் கொடுக்கவில்லை' என்று கூறி உள்ளே நுழையாதபடி வெளியிலேயே நின்றுவிட்டேன். அவ்வளவு தூரம் இந்தப் பிரச்சினையைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எ. ஆர். மாரிமுத்து : அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக அல்லாமல் தனியார் மூலமாக இன்டர்நேஷனல், ஃபெர்குசன் டிராக்டர்கள் தமிழ்நாட்டில் விநியோகம் செய்யப்படுகிறதா ? அப்படியானால் எத்தனை ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தனியாகக் கேள்வி போட வேண்டும்.

Diesel oil for pump sets

* 560 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for the Agriculture be pleased to state—

(a) whether the Agriculturists of Coimbatore District are required to obtain identity cards for purchase of diesel oil for their pump sets; and

(b) if so, the details thereof?

1973 டிசம்பர் 1]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : டீசல் எண்ணெய்க்குத் தட்டுப்பாடு இருந்தபோது கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அடையாளக் கார்டு வழங்கினர். தற்போது டீசல் எண்ணெய்க்குத் தட்டுப்பாடும் இல்லை, அடையாளக் கார்டு வழங்கப்படுவதும் இல்லை.

சாண்டிநல்லா கோழிப்பண்ணை

*561 வினா—**திரு. கு. அ. பொம்மன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகையில் சாண்டிநல்லா கோழிப்பண்ணையினை விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : உதகை சாண்டிநல்லா கோழிப் பண்ணையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இல்லை. ஏனென்றால் அங்கு கோழிப் பண்ணையே இல்லை. (சிரிப்பு)

தண்டுமேட்டா கிராமத்தில் தெரு விளக்குகள்.

*562 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தாமரைப் பாக்கம் ஊராட்சியில் அடங்கிய தண்டுமேட்டா கிராமத்திற்கு இன்னும் தெரு மின்விளக்குகள் போடப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இவ்வேலை எப்போது நிறைவடையும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) தண்டு மேட்டா கிராமத்திற்கு இரண்டு குழல் விளக்குகள் (தெரு விளக்கு) போடப்பட்டு 29—8—1973 முதல் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. கா. வேழவேந்தன் : நன்றியைச் சொல்லுகின்ற நேரத்தில், ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ஊராட்சியிலும் எவ்வளவு விளக்குகள் எரிகின்றன, எவ்வளவு எரியவில்லை என்ற